

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பணியாளர்கள் குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியினை கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (10.06.2016) ஏற்றுக் கொண்டனர்.

செ.வெ.எண்: 345/2016 நாள்: 10.06.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியினை கல்குளம் வட்டாட்சியர் அலுவலக பணியாளர்கள் இன்று (10.06.2016) ஏற்றுக்கொண்டனர்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சிறு வயதிலிருந்தே குழந்தைகள் பள்ளிக்கு சென்று கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், அவர்களது பெற்றோர்களிடம் தங்களது குழந்தைகளுக்கு கல்வி கற்பதை ஊக்குவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தொழிலாளர் நலத்துறை மூலம் பல்வேறு விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் ஒவ்வொரு ஆண்டு ஜூன் 12-ம் தேதி உலக குழந்தைகள் தொழிலாளர் முறைக்கு எதிரான தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், "இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுகுட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும் குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும் தமிழகத்தை குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன்" என்ற குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியினை கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பணியாளர்கள், கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (10.06.2016) ஏற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் திரு. பி.வி. சரவணன், கல்குளம் வட்டாட்சியர் திரு. ஒய். குமாரதாஸ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.